# ST. JOSEPH'S COLLEGE
## COLOMBO - 10.
## STUDY PACK
## Tamil Language
Grade - 8

**பாடம் - 09**

## ஆக்கிமிடீசு

1) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல்லை பாடத்திலிருந்து தெரிந்து எழுதுக.

(i) நாமம் -
(ii) முடி -
(iii) ஐயம் -
(iv) பொன் -
(v) வேந்தன் -
(vi) சுத்தம் -
(vii) பாரம் -
(viii) விரைவு -
(ix) நெறி -
(x) கணப்பொழுது -

2) எதிர்கருத்துச் சொல் தருக.

(i) ஐயம் -
(ii) சத்தியம் -
(iii) ஏகம் -
(iv) உபகாரம் -
(v) ஒளி -
(vi) குணம் -
(viii) நல்லோர் -

3) எதிர்பால் சொற்கள் தருக.

(i) நம்பி -
(ii) ஐயன் -
(iii) இந்திரன் -
(iv) உழவன் -
(v) கூனன் -
(vi) தனவான் -
(vii) முடவன் -
(viii) திருவாளன் -
(ix) கணவன் -
(x) பாங்கன் -

## வினைச்சொற்கள் - (iii)

### ஏவல்வினை

(i) ஏவல் ஒருமை வினை
(ii) ஏவல் பன்மை வினை

* **ஏவல்வினை :-** முன்னிலையில் இருப்போரை வினையை நிகழ்த்துமாறு அல்லது நிகழ்த்தாது இருக்குமாறு ஏவுவதற்கு பயன்படும்.

(i) ஏவல் ஒருமை வினை:-

| | | | |
|---|---|---|---|
| வா | எடு | நில் | போ |
| வராதே | எடுக்காதே | நில்லாதே | போகாதே |
| வராதீர் | எடுக்காதீர் | நில்லாதீர் | போகாதீர் |

(ii) ஏவல் பன்மை வினை

| | | |
|---|---|---|
| செய்யுங்கள் | எடுங்கள் | வாருங்கள் |
| செய்யாதீர்கள் | எடுக்காதீர்கள் | வராதீர்கள் |

**வியங்கோள் வினை:-**

வாழ்தல் (வாழ்க)

வைதல் (ஒழிக)

வேண்டுதல் (தருக)

விதித்தல் போன்ற பொருளில் அமைந்துள்ள வினைச்சொற்களாகும்.

* வாழ்க (க) வாழிய (இய) வாழியர் (இயர்) வாழி(இ)
  க, இய, இயர், இ போன்ற விகுதிகளைப் பெற்று வரும்.

* பக்கம் 74
  பயிற்சி 1, 2 செய்க.

* ஆக்கிமீடீசு என்னும் பாடலை கதையாக எழுதுக.

* கணிப்பீட்டுப் பரீட்சை 1
  வினாக்கள் கேட்டல் மூலம் ஒருவர் பற்றிய தகவல்களை அறிந்து தொகுத்து கூறுதல்.

  (i) பெயர்
  (ii) பிறந்த திகதி
  (iii) வசிப்பிடம்
  (iv) பாடசாலை
  (v) பொழுதுபோக்கு
  (vi) விரும்பும் விளையாட்டு
  (vii) விரும்பும் பானம், உணவு
  (viii) பெற்றோர்
  (ix) நண்பர்கள்
  (x) எதிர்கால இலட்சியம்

* நேரம் 5 நிமிடங்கள்
  (ஆயத்தம்)
  சுவைபட ஒருவரைப் பற்றிய நேர்மையான கருத்துக்களை முன் வைக்கவும். (எழுதுக)

## திரிசொல்

| ஒரு பொருள் குறித்து பல சொல் | பல பொருள் குறித்த ஒரு சொல் |
|---|---|

* ஒரு பொருள் குறித்த பல சொல்

* பக்கம் 76 இல் உள்ளவற்றை எழுதி மனனம் செய்க.

* பக்கம் 77 இல் உள்ள பயிற்சிகளை (1, 2) செய்க.

* பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

(i) காற்று, ஊதை, பாதை, பவனம், வளி

(ii) இனம், கிளை, சுற்றம், மாற்றார், ஒக்கல்

(iii) சொல், வாக்கு, கிளவி, மொழி, எழுத்து

(iv) மலை, கிரி, ககனம், வெற்பு, சிலம்பு

(v) களிறு, சிங்கம், அரி, ஆளி, சீயம்

**பாடம் - 10**

## நாடகமே உலகம்

பாடத்தை மௌனமாக வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) இந்த உலகம் ஒரு நாடகசாலை எனக் கூறிய அறிஞர் யார்?
2) நாடகத்தை பாமர மக்களின் பல்கலைக்கழகம் எனக் கூறியவர் யார்?
3) நாடகமே உலகம் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
4) நாடகம் மூலமாக கற்பிக்க சிறந்த பாடங்கள் 2 தருக.
5) கட்டுரையில் கையாளப்பட்ட பாடலில் நாடகசாலை பற்றிக் குறிப்பிடப்படுவது என்ன?

பின்வரும் அரும்பதங்களைத் தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| 1) அளப்பரியது | பிரசங்கி |
| 2) முகத்தின் உணர்ச்சி வேறுபாடு | மேலுதைப்பு |
| 3) பிரசங்கம் செய்பவர் | நகை செய்பவன் |
| 4) மேல் நோக்கித் தொழிற்படும் விசை | நொடி |
| 5) பொற்கொல்லன் | முகபாவம் |
| 6) கணப்பொழுது | எண்ணரியது |
| | முடிசூட்டுவிழா |

## சொற்றொடரும் வாக்கியமும்

### * சொற்றொடர் :-

* அமைப்பு ரீதியான உறவுடைய ஒரு சொல் அல்லது சொற்களின் தொகுதியாகும்.
* சொற்றொடர் வாக்கியத்தின் உறுப்பாக அமையும்.

சொற்றொடர்

| பெயர்த்தொடர் | வினைத்தொடர் |
|---|---|
| பெயர்ச்சொல்லைத் தலைமை உறுப்பாக கொண்ட தொடர் | வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாக கொண்ட தொடர் |

| பெயர்த்தொடர் | வினைத்தொடர் |
|---|---|
| இனிமையான பழம் | பழுத்து விழுந்தது |
| வண்ண பட்டாசுகள் | இனிமையாகப் பாடுவாள் |
| பசுமையான மரங்கள் | உயர்ந்து வளர்ந்தன |
| செந்நிறப் பூக்கள் | விரைந்து வந்தான் |

## அழைப்பிதழ்

* விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் பங்குபற்ற வருமாறு விருந்தினர்களை அழைப்பதற்கு அழைப்பிதழ் பயன்படுத்தப்படும்.

அழைப்பிதழ்களின் வகைகள்

1) திருமண அழைப்பிதழ்
2) பிறந்தநாள் அழைப்பிதழ்
3) புதுமனை புகுவிழா அழைப்பிதழ்
4) பரிசளிப்பு விழா அழைப்பிதழ்
5) நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்
6) பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அழைப்பிதழ்
7) கலைவிழா அழைப்பிதழ்

* செயற்பாடு 1

மாதிரி அழைப்பிதழ் ஒன்றை பயிற்சி புத்தகத்தில் ஒட்டவும்.
அவ் அழைப்பிதழில் இடம்பெற்றுள்ள விடயங்களை எழுதவும்.

* செயற்பாடு 2

நீர் விரும்பிய தலைப்பில் அழைப்பிதழ் ஒன்றை தயாரிக்கவும்.

**பாடம் - 11**

## சொல்லின் இசை

பாடத்தை வாசித்து பக்கம் 88 இல் உள்ள கிரகித்தற் பயிற்சியை செய்யவும்.

### வாக்கியம்

* வாக்கிய உறுப்புக்கள்
  - (i) எழுவாய் (கருத்து எழும் இடம்)
  - (ii) பயனிலை (கருத்து முற்றுப்பெறும் இடம்)
  - (iii) செயப்படுபொருள் (பயனிலையின் பயனை அடையும் பெயர்ச்சொல்)

* சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நின்று தொழிற்படும். அவை தொக்கு நிற்கும் எழுவாய் எனப்படும்.

* வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றுக்கு அடைமொழிகளும் இடம்பெறும்.

அடைமொழிகள் :- * சொற்களை வர்ணிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

(i) எழுவாய் அடைமொழி - எழுவாய் சொற்களை வர்ணிக்கும்
( திறமையான, அழகான )

(ii) பயனிலை அடைமொழி - பயனிலை சொற்களை வர்ணிக்கும்
( அழகாக, விரைவாக )

(iii) செயப்படுபொருள் அடைமொழி - செயப்படுபொருளை வர்ணிக்கும்
( சிறிய, வண்ண வண்ண )

* பக்கம் 89 இல் உள்ள பயிற்சிகளை செய்யவும்.